*இலங்கைப் பிரசைகள் என்ன பாவிகளா? அப்பாவிகளா?*

# அரசியல்வாதிகள் ஊழல் செய்ய அதை ஈடு கட்டுவது நாட்டின் பிரசைகளா?

( கனக நமநாதன் )

தேர்தல் காலங்களில் அடி பணிந்து தலை குனிந்து நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை அள்ளி வீசி ஆட்சியை பிடித்த பிறகு நாட்டை முன்னேற்ற முடியாது எனக்கூறி பெற்ற கடன்களை அடைக்க மக்கள் வரி செலுத்த வேண்டும் என நிர்பந்திக்கும் அரசின் கொள்கையை ஏற்கமுடியுமா? இலஞ்சம் ஊழல் வீண்விரையம் என்பனவற்றால் நாட்டை சின்னாபின்னமாக்கி சீரழிக்கும் அரசியல்வாதிகளின் அதிகார அத்துமீறல்கள் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளினால் ஏற்பட்டுள்ள நாட்டின் பொருளாதார நிலைமைதனை பட்டியல் போட்டு விளக்கத் தேவையுள்ளது.

புதிய அரசியல்வாதிகளை உருவாக்க முடியாமலும் பழையவர்களை ஒதுக்கி மாற்றிக்கொள்ளமுடியாமலும் அரச சேவையில் நிரந்தர நியமனம் பெற்றவர்கள் போன்று தொடர்ந்தும் ஆட்சிபீடம் ஏறும் சந்தர்ப்பமே இதற்கெல்லாம் காலாக அமைகின்றது. இவஞ்சம் ஊழல் வீண் விரையம் போன்ற இழிவான நிலைமைகள் ஏற்பட தொடர் பதவி வகிப்பு வாய்பளிக்கின்றது. தேர்தலில் தோற்றவர்களும் தேசியப்பட்டியல் மூலம் உள்ளீர்க்கப்படுகின்றார்கள்.

முன்னைய காலங்களில் மிகவும் நேர்மையான ஒழுக்கமுள்ள படித்த அத்துடன் சொத்துக்களையுடையவர்களே பொதுப்பணிக்கு என அரசியலுக்கு முன்வருவார்கள். தங்கள் பரம்பரையையும் குடும்ப கௌரவத்தையும் மனதில் இருத்தி பண்பான அரசியலில் ஈடுபட்டு வந்திருந்நார்கள். அவர்களிடம் நேர்மை உண்மை கடமை உணர்வு இருந்தது. அக்கால அரசியலில் தமிழ் மக்களும் சரி சிங்கள மக்களும் சரி படித்த பண்புள்ள கௌரவமான குடும்பத்தை சேர்ந்தவைகளையே பிரதிநிதிகளாக தெரிவுசெய்ய வாக்காளர்களான தொகுதி மக்கள் எண்ணினர். சேர். பொன். இராமநாதன் ஜீ.ஜீ. பொன்னம்பலம் அருணாசலம் மகாதேவா எஸ்.ஜே.வி.செல்வநாயகம் டாக்டர். நாகநாதன் கோப்பாய் சி.வன்னியசிங்பம் உடுவில் தர்மலிங்கம் வீ யோகீஸ்வரன் கதிரவேற்பிள்ளை போன்ற பலரும் பாரம்பரிய பன்பாட்டையும் சுயகௌரவத்தையும் சொந்தமான குடுமபச் சொத்துக்களையும் ஒருங்கே கொண்டிருந்தனர். அவர்களுக்கு இலஞ்சமும்

தேவைப்படவில்லை. ஊழலீல் உழல வேண்டிய தேவையும் இருக்கவில்லை. தங்களின் கல்வியறிவையும் பண்பையையும் சொந்தமான குடும்பச் சொத்துக்களையும் முதலீடாகக் கொண்டு பாமர மக்களுக்கு உதவுவதையே தங்கள் கடமையென செயற்பட்டார்கள்.

சிங்கள சமூகத்திலும் சேனநாயக்கா குடும்பமென்றாலும் பண்டாரநாயக்கா குடும்பமென்றாலும் ஜெயவர்தனா குடும்பமென்றாலும் படித்தவர்கள் பண்பானவர்கள் பணவசதி கொண்டவர்களாவார்கள். தொகுதிகளில் போட்டியிட்டவர்களும் அப்பகுதியில் வாழ்ந்த பெருந்தகையாளர்களே. மக்கள் சேவையில் ஊக்கம் கொண்டவர்களும் பணபலம் படைத்த பெரியோர்களே. இவர்களெல்லாம் இலஞ்சம் ஊழல் என்றால் இழுக்கு கௌரவக் குறைவு என்ற எண்ணம் கொண்டவர்கள்.

தமிழர்களிலும் சேர் பொன். இராமநாதன் சொத்தும் பணமும் மிகுதியாகக் கொண்டிருந்தவர். தனது சொத்துக்களை தமிழ் மக்களின் பிள்ளைகளின் கல்வி அறிவுக்கும் ஆன்மீக வளர்ச்சிக்கும் தேவையான பாடசாலைகளையும் கோவில்களையும் உருவாக்கினார்கள். பரமேஸ்வரா கல்லூரி இராமநாதன் கல்லூரி கொழும்பில் கொட்டாஞ்சேனை அம்பலவாணர் கோயில் என சைவத் தமிழ் மக்களுக்காக கட்டுவித்தார். இவற்றைத் தொடர்ந்து பராமரிக்கத் தேவையான வருமானத்தை உருவாக்க விவசாயம் செய்யும் காணி பூமிகளையும் கிளிநொச்சியில் வாங்கி வைத்திருந்தார்கள்.

அக்காலத்து பாராளுமன்ற பிரதிநிதிகள் வேறு ஒரு தொழிலிலும் ஈடுபட்டு வருமானம் பெற்று வந்தார்கள். குறிப்பாக சுயதொழில் முயற்சியில் ஈடுபடுபவர்கள் பெரும் வர்த்தகர்கள் சட்டத்தரணிகள் அரசியலில் இருந்தார்கள். அதனால் இலஞ்சம் ஊழல் என்ற அசிங்கமான ஈனச் செயல்களில் ஈடுபடவில்லை.

ஆனால் இக்காலத்தில் வாக்காளபெருமக்கள் வேட்பாளர்களின் பண்புகளையோ பரம்பரைகளை படிப்புக்களையோ பார்ப்பதில்லை. மேடையில் தமிழை எதுகை மோனகையுடன் உணர்ச்சிபூர்வமாக உரத்துப் இனவாதம் பேசினால் கை தட்டலோடு வாக்கு வங்கியையும் ஏற்படுத்துர். எத்தனையோ உயிர்களை பறித்து சித்து விளையாட்டு விளையாடியவர்கள் நீதிக்கு புறம்பான கொலைகளை புரிந்தவர்கள் நம்பிக்கை மோசடி செய்தவர்கள் ஆட்கடத்தி கப்பம் பெற்றவர்கள் கட்டி வைத்து கொள்ளை அடித்தவர்கள் குடு கஞ்சா வியாபாரம் செய்தவர்கள் அரச பணத்தை் வீண் விரயமாக்கியவர்கள் துஸ்பிரயோகம் செய்தவர்கள் எல்லாரும் மீண்டும் நல்லவர்கள் போன்று பாராளுமன்றத்தில் நுளைந்து கொள்கின்றார்கள். இது தென்னிலங்கையில் மட்டுமல்ல வடகிழக்கிலும் ஒரு அரசியல் சித்தாந்தமாகி விட்டது. வாக்காளர்கள் இவர்களை இனம் கண்டு ஒதுக்கிவிட வேண்டும்.

ஊழல் மன்னன் குடும்ப ஆட்சி ராஜபக்ஷ என சனாதிபதி தேர்தலின் போதும் : பாராளுமன்ற தேர்தல் காலங்களிலிலும் மேடைகளில் பேசி பகிரங்கப்படுத்தி நல்லாட்சியை ஆட்சியை அமைத்தவர்கள் அமைத்து சில வாரங்களிளேயே பிணைமுறி ஏலத்தில் முறைகேடாக செயற்பட்டு அவர்களும் ஊழல்வாதிகளாக தங்களையும் வெளிக்காட்டி விட்டார்கள்.

அவ்வாறாயின் ஆட்சியில் அமரும் அரசியல்வாதிகள் இலஞ்சம் ஊழல் மோசடி வீண் விரையம் போன்றவற்றில் ஈடுபடுபடுவதினால் ஏற்படும் சொத்து நட்டங்கள் நாட்டின் பொருளாதார சீரழிவுகள் பாதிப்புக்கள் போன்றவற்றை ஈடு செய்ய பொது மக்களிடம் வரி செலுத்தக் கோருவது எவ்விதத்தில் நியாயமாகும். கோபாலபிள்ளை அமிர்தலிங்கம் என்ற ஒரு பொருளாதார விற்பனர் கூறுகையில் - நாட்டிற்கு கிடைக்கும் மொத்த வருமானமும் தற்போது கடனையும் அதற்கான வட்டியையும் கட்டுவதற்கு பயன்படுத்தப்படுவதாகவும் நாட்டின் நாளாந்த நிர்வாகச் செலவுகளுக்கும் ஆரம்பிக்கப்படும் அபிவிருத்தி வேலைகளுக்கும் தேவையான பணம் புதுக்கடனாக பெறப்படுகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

இது உண்மையானால் இவ்வாறான நிலைமைக்கு நாட்டை இட்டுச்சென்ற அரசியல்வாதிகளுக்கு எதிராக அப்பணத்தை மீட்டெடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என எந்த அரசியல்வபதிகளும் சிந்திக்கவில்லை. வழக்கு தாக்கல் செய்து சிறைக்கு அனுப்புவதால் நாட்டின் பொருளாதாரத்தை சீராக்க முடியுமா?. அவர்கள் சேகரித்த பணத்தை பாதுகாப்பான முறையில் பல நாடுகளில் வங்கியிலோ வேறு விதத்திலோ ஒழித்து வைத்துள்ளார்கள் என முன்னர் சில அமைச்சர்களினால் தெரிவிக்கப்பட்டு வந்தது.

அரசாங்கம் அந்தப் பதுக்கப்பட்டுள்ள பணத்தை மீட்டு கடனை அடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர வரியாக மக்களின் மேல் சுமையை சுமத்தக்கூடாது.

அரசியல்வாதிகள் கொள்ளையடித்து சுகபோகமாக வாழ மக்கள் வரியாக அப்பணத்தைச் செலுத்த ணேடியது இந்த நிகழ்வுகள் சகல அரசியல்வாதிகளிலும் நம்பிக்கையை இழக்க வைத்துள்ளது.